**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**சமுதாயப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வின்மீது கூடுதல் கவனம் செலுத்தியபடி 2021 ஆம் ஆண்டிற்கான அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதி (Advance Brampton Fund) வழங்கலுக்கான விண்ணப்பங்களை ப்ராம்ப்ட்டன் நகரம் வழங்கத் துவங்கியிருக்கிறது.**

**லாப நோக்கம் கொண்டிருக்காத மற்றும் அறக்கட்டளை நிறுவனங்கள் தங்களின் திட்டப்பணிக்கான நிதி வேண்டி விண்ணப்பிக்கலாம்.**

ப்ராம்ப்ட்டன், ON (டிசம்பர் 14, 2020) – ப்ராம்ப்ட்டன் நகரம் இப்போது 2021 ஆம் ஆண்டிற்கான அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதி [Advance Brampton Fund (ABF)] கோரி வரும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்கிறது. நகரசபையானது, அக்டோபர் 2020 லேயே திட்ட வடிவமைப்புக்கு அங்கீகாரம் தந்துவிட்டது. நகரத்தின் 2021 ஆண்டுக்கான இயக்கசெயல்பாட்டு வரவுசெலவுத் திட்டத்தின் ஒப்புதலைத் தொடர்ந்து, ப்ராம்ப்ட்டனை தளமாகக் கொண்ட லாப நோக்கம்கொண்டிராத மற்றும் அறக்கட்டளை தொண்டு நிறுவனங்கள் இப்போதைய கவுன்சிலின் காலத்திற்குள்ளாக முடிக்க வேண்டிய முன்னுரிமை கொண்ட விஷயங்களை மேம்படுத்தும் திட்டங்களுக்கான நிதி கோரி விண்ணப்பிக்கலாம்.

ப்ராம்ப்ட்டனை தளமாகக் கொண்ட பதிவுசெய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள், ஒருங்கிணைந்த இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் இணைக்கப்படாத இலாப நோக்கம் கொண்டிராத நிறுவனங்கள் நிதியுதவி வேண்டி விண்ணப்பிக்கலாம். மூன்று வகையான நிதி வழங்கும் முறைகளில் ஒன்றில் நிதி பெறலாம், அவற்றுள் அடங்குபவை: புதிதாக முளைத்து எழுகின்ற, வளர்ந்துகொண்டிருக்கின்ற மற்றும் பல்கிப் பெருகும் வகையிலான அமைப்புக்கள்.

வளர்ந்து கொண்டிருக்கின்ற மற்றும் பல்கிப் பெருகும் வகையிலான நிதிவழங்கல் வகையில் உள்ள திட்டங்களுக்காக, பிப்ரவரி 3, 2021 வரை விண்ணப்பிக்கும் வகையில் இப்போது வருடாந்திர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது:

- **வளர்ந்துகொண்டிருக்கும் திட்டங்கள்** எனும் வகையில், ஒரு முறையாவது தங்கள் திட்டப்பணியை நிறைவேற்றிய நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது - நிகரான நிதியில், $ 12,500 வரை தகுதி அடையலாம்.
- **பல்கிப் பெருகும் திட்டங்கள்** எனும் வகையில் ப்ராம்ப்ட்டனில் ஏற்கெனவே நிலை நாட்டப்பட்டு இயங்கிவருகின்ற திட்டப்பணிகளுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது - நிகரான நிதியில், $ 25,000 வரை தகுதியடையலாம்.

இந்த ஆண்டு புதிதாக துவக்கப்பட்டிருக்கின்ற, ப்ராம்ப்ட்டனில் புதிதாக முளைத்து எழுகின்ற திட்டங்களை ஆதரிக்கின்ற வகையில், காலாண்டு அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். 2021 ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையில் நடைபெறும் திட்டங்களுக்கு 2021 ஜனவரி 4 ஆம் தேதி விண்ணப்பங்களுக்கான முதலாவது காலாண்டு அழைப்பு விடுக்கப்படுகிறது. விண்ணப்பிக்க காலக்கெடு 2021 ஜனவரி 29 ஆகும்.

மானியத்தை கிராண்ட் ரைட்டிங் 101 (Grant Writing 101) எனப்படும் நிதி பெறுவதற்கான ஆவணங்களை சமர்ப்பித்தல் குறித்த ஒரு பயிற்சிப்பட்டறை ஜனவரி 12, 2021 செவ்வாய்க்கிழமை மாலை 6:30 மணிக்கு ஆன்லைனில் நடைபெறும். இதற்கு பதிவு செய்துகொள்வது அவசியமாகும்.

நகரசபையின் காலத்திற்குள்ளான முன்னுரிமை கொண்ட விஷயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, தகவல் பெறுவதற்கான அமர்வுகள் பின்வருமாறு ஆன்லைனில் நடைபெறும்:

- ப்ராம்ப்ட்டன் ஒரு கலப்பின நகரம்: ஜனவரி 13, 2021, மாலை 6 மணி
- ப்ராம்ப்ட்டன் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரம்: ஜனவரி 14, 2021 வியாழக்கிழமை, மாலை 6 மணி
- ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரம்: ஜனவரி 18, 2021 திங்கள், மாலை 6 மணி

அனைத்து விப்ரங்களும் Brampton.ca/ABF இல் கிடைக்கின்றன.

**பின்னணி**

நகரசபையின் காலத்திற்குள்ளான முன்னுரிமை கொண்ட விஷயங்களை ஆதரிக்கும் திட்டங்களைத் தொடங்குதல், மேம்படுத்துதல் மற்றும் பல்கிப் பெருக்குதல் போன்ற ப்ராம்ப்ட்டனை அடிப்படையாகக் கொண்ட இலாப நோக்கற்ற மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு ABFஆதரவு தருகிறது. நிகரான நிதிகள் மூலம் மானியம் பெறுபவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்; இது திட்டத்தின் நிலைத்து இருக்கவல்ல தன்மை, மற்றும் ப்ராம்ப்ட்டன் சமூகத்திற்குள் நன்கு நிர்வகிக்கப்பட்டுவரும் இலாப நோக்கற்ற துறைக்குள்ளாக உள்ளூரில் அர்த்தமுள்ள பணிகளை இலக்கு நோக்கி நகர்த்துவதற்கு கூட்டு சேருதல், ஒத்துழைப்பு தருதல் மற்றும் வழிநடத்துதல் ஆகியவற்றுக்கு கை கொடுக்கிறது.

ப்ராம்ப்ட்டன் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரம் என்று கவுன்சிலின் காலத்திற்குள்ளாக முடிக்க வேண்டிய முன்னுரிமை கொண்ட விஷயங்கள் உள்ளன; இவற்றின் கீழாக, சமூக பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு ஆகியவைதான் ABF க்குள் வளர்ந்து வரும் தேவையாக இனம் காணப்பட்டது. இதன் விளைவாக, எங்கள் சமூகத்தில் உள்ள இலாப

நோக்கற்ற மற்றும் தொண்டு நிறுவனங்களின் தலைமையிலான சமூக பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு திட்டங்களை ஆதரிப்பதற்காக ABF இன் கீழாக மானிய நிதிக்கு நகர நிர்வாகம் $150,000 நிதி ஒதுக்கியுள்ளது.

**லின்குகள்**

- [2021 அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதி பற்றிய விபரங்கள் (2021 Advance Brampton Fund details)]
- [ஊடக வெளியீடு -20121 ஆம் ஆண்டில் சமுதாய பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான நிதி மானியம் வழங்குவதில் ப்ராம்ட்டன் நகரம் $150,000 தொகைக்கு பொறுப்பு கொண்டிருக்கிறது (Media Release - City of Brampton commits $150,000 in grant funding to enhance community safety in 2021)]

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கின்ற இலாப நோக்கம் கொண்டிருக்காத மற்றும் தொண்டு நிறுவனங்கள் நமது நகரத்தில் சிறப்பாக வாழ, வேலை செய்ய மற்றும் விளையாடுவதற்கான வகையில் மாற்ற உதவுகின்றன. அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதியத்தின் மூலமாக, இந்த நிறுவனங்கள் அனைவரின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும் திட்டங்களுக்கான நிதி வேண்டி விண்ணப்பிக்கலாம். இந்த ஆண்டு என்ன திட்டங்கள் முன்வரவிருக்கின்றன என்பதைக் காண்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதியமானது  உள்ளூரில் இருக்கின்ற இலாப நோக்கம் கொண்டிருக்காத மற்றும் தொண்டு நிறுவனங்கள் சமூகத் தேவையைப் பூர்த்தி செய்யும் திட்டங்களை அங்கீகரிக்கிறது; இது சமுதாயத்திற்கான தேவைகளை பூர்த்தி செய்வது, நமது கவுன்சில் முன்னுரிமைகளை மேம்படுத்துவதில் பங்களிக்கும் தனித்துவமான மற்றும் மதிப்புமிக்க பங்கை வழங்குகிறது. ப்ராம்ப்ட்டனை தளமாகக் கொண்டு இயங்கும் இந்த நிறுவனங்கள் நிதியுதவிக்கு விண்ணப்பிக்க முன்வருமாறு நான் ஊக்குவிக்கிறேன். "

- *ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10, தலைமை பொறுப்பு பெறுநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கவுன்சில் காலத்தில் நடபெறவேண்டிய முன்னுரிமை கொண்ட விஷயங்களில் இருக்கும் ஒரு திட்டத்துடன் நீங்கள் ஒரு இலாப நோக்கற்ற அல்லது தொண்டு நிறுவனத்தின் ஒரு பகுதியாக இருந்தால், அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதிக்கான உங்கள் விண்ணப்பத்தை நாங்கள் பெற

விரும்புகிறோம்! ஒரு பயிற்சிப் பட்டறை மற்றும் ஒரு தகவல் அமர்வுக்கு பதிவுசெய்து, எங்கள் சமூகத்திற்கு பங்களிக்க உங்கள் விண்ணப்பத்தைப் பெறுங்கள். ”

– *ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5, துணைத் தலைமை பொறுப்பு பெறுநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“அட்வான்ஸ் ப்ராம்ப்ட்டன் நிதியத்தின் மூலம் இலாப நோக்கம் கொண்டிருக்காத மற்றும் தொண்டு செய்யும் நிறுவனங்களின் திட்டங்களுக்கு உயிர் கொடுக்க உதவுவதற்காக நகர ஊழியர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். வளர்ச்சி பெறவைக்கின்ற மற்றும் பல்கிபெருக வைக்கும் திட்டங்கள் வகையில் இப்போதே விண்ணப்பிக்கவும், புதிதாக முளைத்து வரும் திட்டங்கள் வகையினரும் தயாராக இருக்கவும், இவை காலாண்டு காலத்திற்குள் இயங்கத் துவங்கும். ”

– *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca